[1st November 1962

திரு. வை. சங்கரன் : உதகமண்டல நகரத்திலுள்ள 'புட்பாத்கள்', ரோடுகள் நல்ல முறையிலே இல்லை, சீர்கேடாக இருக்கின்றன என்ற முறையீடு சர்க்காருக்கு வந்திருக்கிறதா ?

கனம் திரு. வெ. ராமையா : நான் இப்பொழுது கொடுத்த தகவல்படி அதெல்லாம் முறையாக இருக்கின்றன என்று தான் சொல்லப்பட்டிருக்கிறது.

* 1070-ஐஐ. கேள்வி.—**திரு. கி. இரா. சம்பந்தம் :** கனம் பொதுப் பணித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

மாயூரம் தாலூக்கா பொரையார்-மங்கநல்லூர் ரஸ்தாவிலுள்ள சில இடங்கள் ஆற்றின் கரையாக இருப்பதை பி.டபிள்யூ. வில் இருந்து ஹைவேஸுக்கு மாற்ற உத்தேசமுண்டா ?

THE HON. SRI V. RAMAIAH : There is under consideration a comprehensive proposal to transfer all canal bank roads including the road under reference from the Public Works Department to the Highways and Rural Works Department according to a phased programme at least from the beinning of the next Five-Year Plan.

* 1070-ஜேஜே. கேள்வி.—**திரு. அ. தங்கவேலு :** கனம் பொதுப் பணித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

திண்டிவனத்திலிருந்து வேலூர் போகும் ரோடில் திண்டிவனத்திலிருந்து 8 மைல் வரையில் தார் போடாமல் இருக்கக் காரணமென்ன ?

THE HON. SRI V. RAMAIAH : Of the length of 8 miles, one mile one furlong is already blacktopped. The remaining length of six miles seven furlongs of the road remains to be blacktopped. Blacktopping of this reach has since been taken up. The work is in progress now and is expected to be completed this year.

*1070-KK. *Q.*—SRI R. S. VEERAPPA CHETTIAR : Will the Hon. the Minister for Works be pleased to state—

(*a*) whether there is any proposal to construct culverts for the dips in the Marappur-Marandahally Road, Salem district, during the year 1962–63; and

(*b*) if so, the details thereof?

THE HON. SRI V. RAMAIAH : (*a*) The proposal has been deferred due to the restricted Third Plan provision for roads.

(*b*) Does not arise.

திரு. ரா. சு. வீரப்ப செட்டியார் : இந்த ரோடில் அநேக பள்ளங்கள் இருப்பதினால் போக்குவரத்திற்கு மிகவும் இடைஞ்சலாக இருக்கிறது. இதுபற்றி அதிகாரிகளிடம் சொல்லியும் கவனிக்காமல் இருப்பதினால், அரசாங்கம் இதுபற்றி கவனிக்கும்படி அதிகாரிகளுக்கு உத்தரவிடுமா என்று அறிய விரும்புகிறேன்.